

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் தொகுதிக்குட்பட்ட, பரணிபுத்தூரில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பினை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடங்கி வைத்து, கர்ப்பிணி பெண்களுக்கு சீர்வரிசை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி மோகன், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் படப்பை ஆ.மனோகரன், ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், ஒன்றியக் குழுத்தலைவர் சரஸ்வதி மனோகரன், குன்றத்தூர் ஒன்றியக்குழு துணைத் தலைவர் உமாமகேஸ்வரி வந்தேமாதரம், ஊராட்சி மன்ற தலைவர் கௌரி தாமோதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



நேற்று (07.10.2023) தலைமைச் செயலகத்தில், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, தலைமையில், பெருநகர சென்னை மாநகராட்சி, சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், நெடுஞ்சாலைத்துறை, சென்னை பெருநகர காவல்துறை ஆகிய உயர் அலுவலர்களுடன் சென்னை மற்றும் புறநகர் மாநகரில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் பொருட்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இக்கூட்டத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / ஆணையர், பெருநகர சென்னை உ மாநகராட்சி, கூடுதல் தலைமைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம், கூடுதல் தலைமைச் செயலாளர், போக்குவரத்துறை, முதன்மைச் செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, முதன்மைச் செயலாளர், உள்துறை, முதன்மைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை. தமிழ்நாடு காவல்துறை இயக்குநர், சென்னை மாநகர காவல்துறை ஆணையர், முதன்மைச் செயலாளர், சென்னை மெட்ரோ இரயில் லிமிடெட், மேலாண்மை இயக்குநர், சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், உறுப்பினர் செயலாளர், பெருநகர வளர்ச்சிக் குழுமம், இயக்குநர், பேரிடர் மேலாண்மை, பெருநகர சென்னை மாநகராட்சியின் இணை ஆணையர் (பணிகள்), கூடுதல் மாநகர காவல் ஆணையர் (போக்குவரத்து), மற்றும் வட்டார துணை ஆணையர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் பல்வேறு துறைகளின் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மோடி அரசின் வாய்ப்பந்தல் - பொருளாதாரத்தில் பெரிய ஓட்டை!

# 2025க்குள் 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எப்படி எட்ட முடியும்?

## ‘தீக்கதிர்’ நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

சென்னை, அக். 8 -

மேக் இன் இந்தியா மூலம் இந்தியா வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற மோடியின் வாய்ப் பந்தலில் பெரிய ஓட்டை விழுந்திருக்கிறது எனவும் முக்கிய துறைகளின் உற்பத்தி கடும் வீழ்ச்சி யடைந்திருப்ப தால் 2025க்குள் 5 டிரில்லி யன் பொருளாதாரத்தை எப்படி எட்ட முடியுமென ‘தீக்கதிர்’ நாளேடு தலையங் கத்தில் கேள்வி எழுப்பி யுள்ளது.



தீக்கதிர்

2023 அக்டோபர் 7 சனிக்கிழமை

வாய்ப்பந்தல் பொருளாதாரம்!

பிரதமர் மோடி 2025க்குள் இந்தியா 5 டிரில்லியன் பொருளாதாரத்தை எட்டும் என மார்தட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால் நிலைமையோ தலைகீழாக இருக்கிறது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வருகிறது. கடந்த புதன்கிழமையன்று ரூ.83.24 ஆக வீழ்ச்சி யடைந்திருந்தது. தனிநபர் ஜிடிபி வளர்ச்சியில் இந்தியா 142 ஆவது இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மோடி பிரதமரானால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 40க்கு வந்து விடும் என ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் துவங்கி பலரும் பல்லக்கு தூக்கினர். அவர்கள் எல்லாம் தற்போது இந்தியாவில்தான் இருக்கிறார்களா என்று தெரியவில்லை. நரேந்திர மோடி முதல்வராக இருந்த

அது வருமாறு: -

பிரதமர் மோடி 2025க்குள் இந்தியா 5 டிரில்லியன் பொருளாதா ரத்தை எட்டும் என மார் தட்டிக் கொண்டிருக்கிறார். ஆனால் நிலைமையோ தலைகீழாக இருக்கிறது. டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு தொடர்ந்து சரிந்து வரு கிறது. கடந்த புதன்கிழமை அன்று ரூ.83.24 ஆக வீழ்ச்சி யடைந்திருந்தது. தனிநபர் ஜிடிபி வளர்ச்சியில் இந் தியா 142 ஆவது இடத்திற் குத் தள்ளப்பட்டிருக்கிறது.

மோடி பிரதமரானால் டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு ரூ. 40க்கு வந்து விடும் என ஸ்ரீ ஸ்ரீ ரவி சங்கர் துவங்கி பலரும் பல் லக்கு தூக்கினர். அவர்கள் எல்லாம் தற்போது இந்தி யாவில்தான் இருக்கிறார் களா என்று தெரிய வில்லை. நரேந்திர மோடி முதல்வ ராக இருந்த போது 2013ஆம் ஆண்டு தனது டிவிட்டர் பக்கத்தில், “டால ருக்கு நிகரான இந்திய ரூபா யின் மதிப்பு வீழ்ச்சி அடைந் ததற்கு தில்லியிலிருந்து ஆளும் அரசின் ஊழல்கள் தான் காரணம்”எனப் பதி விட்டி ருந்தார். இப்போது வீழ்ச்சியடைந்து வருவ தற்கு எந்த ஊழல் காரணம் என மோடி விளக்குவாரா?

தற்போதைய ஒன்றிய பா.ஜ.க. அமைச்சர் ஸ்மிருதி இரானி 2013ல் தனது டிவிட் டர் பக் கத்தில், “சீன ஊடு ருவல், பெட்ரோல் விலை ஏற்றம், ரூபாய் மதிப்பு வீழ்ச்சி, 60% இந்தியர்கள் உணவிற்காக போராடும் போது, இதை மறைக்கக் காங்கிரஸ் மதச்சார்பின்மை குறித்துப் பேசி வருகின்றது” எனப் பதிவிட்டிருந்தார். இப்போது மேற்சொன்ன விஷயங்கள் அனைத்தும் என்ன லட்சணத்தில் இருக் கிறது என ஸ்மிருதி இரானி விளக்குவாரா?

2014ஆம் ஆண்டில் இந்தி யாவின் கடன் ரூ.55 லட்சம் கோடியாக இருந்தது. 2014 க்கு முன்பு இந்தியாவை 67 ஆண்டுகளாக 14 பிரதமர்கள் ஆட்சி செய்தி ருக்கிறார்கள். அந்த 67 ஆண்டுகளில் இந்தியா வின் மொத்த கடன் ரூ.55 லட்சம் கோடி. ஆனால், 2014க்கு பின் கடந்த 9 ஆண்டு கால மோடி ஆட்சியில் இந்தியா வின் கடன் 172 லட்சம் கோடியாக அதிகரித்திருக் கிறது. சுமார் இரண்டரை மடங்கு அதிகரித்ததற்கு யார் பொறுப்பு?

மோடியின் பொருளாதா ரப் பொய்களுக்கும் கள எதார்த்தத்திற்கும் உள்ள இடைவெளி மலைக்கும் மடுவிற்குமானதாக இருக் கிறது. அரசு தனியார் முத லீடு அதிகரிக்கிறது; மேக் இன் இந்தியா மூலம் இந் தியா வேகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது என்ற மோடியின் வாய்ப்பந்த லில் பெரிய ஓட்டை விழுந்தி ருக்கிறது. மேக் இன் இந் தியா 72.5 சதவிகிதமும், அரசு மற்றும் தனியார் முத லீடு 79.2 சதவிகிதமும் வீழ்ச் சிய டைந்திருக்கிறது.

அதிகமான மக்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தந்து கொண்டிருக்கும் ஆயத்த ஆடைகள், கடல் பொருட்கள், பிளாஸ்டிக், ஆபரணங்கள், செயற்கை கற்கள் உள்ளிட்ட துறைக ளின் உற்பத்தி கடும் வீழ்ச்சி யடைந்திருக்கிறது. இதில் எப்படி 2025க்குள் 5 டிரில் லியன் பொருளாதாரத்தை எட்ட முடியும் ?

இவ்வாறு அத்தலை யங்கத்தில் குறிப்பிடப்பட் டுள்ளது.

### தா.இளையஅருணா தலைமை! எஸ்.மோகன் முன்னிலையில்

### மன்னை.தா.சோழராஜன்,பூர்ணசங்கீதா சின்னமுத்து பங்கேற்பு!

# சென்னை வடக்கு மாவட்ட மாணவர் அணி பொறுப்புகளுக்கான நேர்காணல்!

## மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் வெ.சு.சத்தியநாராயணன் அறிக்கை!

சென்னை அக்:8

சென்னை வடக்கு மாவட்ட மாணவரணி பகுதி அமைப்பாளர் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா எம்.சி தலைமை யில் சென்னை வடக்கு மாவட்ட கழகத்திற்குட் பட்ட பெரம்பூர் வடக்கு, பெரம்பூர் தெற்கு, ஆர். கே.நகர் கிழக்கு, ஆர்.கே. நகர் மேற்கு, ராயபுரம் கிழக்கு, ராயபுரம் மேற்கு ஆகிய பகுதிகளுக்கு மாண வர் அணி பகுதி அமைப்பா ளர் துணை அமைப்பாளர் கள் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்தவர்களுக் கான நேர்காணல் நாளை 09-10-2023 திங்கள்கிழமை சென்னை தண்டையார் பேட்டை 478,டி.எச்.ரோடு என்ற முகவரியில் (தண்டை யார்பேட்டை அப்போலோ மருத்துவமனை ) அருகில் நடைபெற உள்ளது.

பகுதிவாரியாக கீழ் கண்ட நேரப்படி நேர்கா ணல் நடைபெறும்

பெரம்பூர் வடக்கு 0910 2023 காலை 9.00 மணியள வில்

பெரம்பூர் தெற்கு 0910 2023 காலை 9.45 மணியள வில்

ஆர்கேநகர் கிழக்கு 0910 2023 காலை 10.30 மணியள வில்

ஆர்கே நகர் மேற்கு 0910 2023 காலை 11.15 மணியள வில்

இராயபுரம் கிழக்கு 0910 2023 காலை 12.00 மணியள வில்

இராயபுரம் மேற்கு 0910 2023 காலை 12.45 மணியள வில்

மாநில மாணவர் அணி இணை செயலாளர் எஸ். மோகன் முன்னிலையில் தலைமைக் கழகத்தின் சார் பில் மாநில துணைச் செய லாளர்கள் மன்னை.த. சோழராஜன் மற்றும் பூர்ண சங்கீதா சின்னமுத்து ஆகி யோர் நேர்காணல் நடத்து கிறார்கள்.

ஆகவே நேர்காணலில் விண்ணப்பதாரர்கள் ஒவ் வொருவரும் தங்களுடைய வயதை நிரூபிப்பதற்கான கல்வி சான்றிதழ்,ஆதார் அட்டை,கழக உறுப்பினர் அட்டை, மாணவரணி போன்ற கழக அமைப்புக ளில் ஏற்கனவே பணியாற்றி யிருந்தால் அது தொடர் பான புகைப்பட தொகுப்பு மற்றும் ஆவணங்களை கொண்டு வருமாறு கேட் டுக் கொள்கிறோம் விண் ணப்பிக்காதவர்களும் நேரில் ஆவணங்களுடன் கலந்து கொள்ளலாம்.

இவ்வாறு மாவட்ட மாணவர் அணிஅமைப்பா ளர் வெ.சு. சத்யநாராய ணன் அறிக்கையில் தெரி வித்துள்ளார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.கழக சுற்றுசூழல் அணி மாவட்ட அமைப்பாளர் மு.பாஸ்கரன் ஏற்பாட்டில் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு 1000 மரக்கன்றுகள் நடும், தொடக்க விழா மாவட்ட கழக செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினரும், டி.ஜெ.கோவிந்தராஜன், தலைமையில், மாநில சுற்று சூழல் அணி துணை செயலாளர் பழ.செல்வகுமார் முன்னிலையில் மீஞ்சூர் பேரூராட்சி சூர்யா நகர் பூங்காவில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் மு.பகலவன், ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பா.செ.குணசேகரன், அத்திபட்டு ஜி.ரவி, க.சு.தமிழ்உதயன், மீஞ்சூர் பேரூராட்சி தலைவர் ருக்குமணி மோகன்ராஜ், துணைத் தலைவர் ப.அலெக்சாண்டர், என்.நரசிங்கமூர்த்தி, கா.சு.ஜெகதீசன், ஜி.ரவிக்குமார், ஆ.சத்தியவேல், இரா.அறிவழகன், பி.முத்து, ஜான் (எ) பொன்னுசாமி, கா.சம்பத், கோல்டு மணி, சி.சுமன், டி.ஜெ.ஜி.தமிழரசன். நா.மோகன்ராஜ், தொமுச. சசிகுமார், வார்டு உறுப்பினர் குமாரி சுற்றுசூழல் அணி துணை அமைப்பாளர்கள் ரஜினி, விஜயபிரசாத், ராஜராம், விக்கிரமன்,யோகி பங்கேற்றனர்.

# திண்டுக்கல்லில் போக்குவரத்துப் பணியாளர்கள் பேரணி!

திண்டுக்கல், அக்.8-

முத்தமிழ் அறிஞர் கலை ஞர் அவர்களின் நூற் றாண்டு விழாவினை முன் னிட்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை லிமிட்) திண்டுக்கல் மண்டலம் சார்பில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் விழிப்புணர்வு வாரம் 5.10.2023 முதல் 18.10.2023 வரை கடைப்பிடிக்க இருப் பதால் போக்குவரத்து பணி யாளர்கள் பங்கேற்ற பேரணி மாவட்ட ஆட்சி யர் முகாம் அலுவலகத்தில் தொடங்கி நகரின் முக்கிய வீதிகள் வழியாக வந்து பேருந்து நிலையத்தில் முடி வுற்றது.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வு பிரசுரங்கள் பொதுமக்களிடம் விநியோ கம் செய்யப்பட்டது.

பொது மேலாளர் டேனி யல் சாலமன் மற்றும் போ.வ.கழக அலுவலர்கள், பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

### க.செல்வம் எம்.பி.- ப.அப்துல்மாலிக் - பாஸ்கர்சுந்தரம் - ஆர்.டி.அரசு பங்கேற்பு!

# இலத்தூர் வடக்கு ஒன்றிய பாக முகவர்கள் கூட்டம்!

## க.சுந்தர் எம்.எல்.ஏ. சிறப்புரை! கே.எஸ்.இராமச்சந்திரன் அறிக்கை!

காஞ்சிபுரம், அக்.8,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இலத்தூர் வடக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வாக்குச் சாவடி பாக முகவர்கள் மற்றும் தேர்தல் பணிக்குழு உறுப்பி னர்கள் ஆலோசனைக் கூட் டம் இன்று (8.10.2023 ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு, காத்தான் கடை யில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு ஒன்றிய அவைத்தலைவர் பி.லோக நாதன் தலைமை வகிக்கி றார்.

வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.எஸ். இராமச்சந்திரன் அனைவ ரையும் வரவேற்றுப் பேசுகி றார்.

சி.ஆர்.பாஸ்கரன், கா. ஏமநாதன், இராணிபாண்டு ரங்கன், ஜி.வெங்கடேசன், பி.ஸ்ரீகாந்த், இ.சுந்தரவடி வழகன், பி.தேவராஜன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மாவட் டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கருத்துரை வழங்கி சிறப்புரையாற்று கிறார்.

இதில் க.செல்வம் எம்.பி, ப.அப்துல்மாலிக், க.பாஸ் கர் சுந்தரம், டாக்டர் ஆர். டி.அரசு, வெளிக்காடு வே. ஏழுமலை, எஸ்.கே.ராஜேந் திரன், ஜெயலட்சுமி மகேந் திரன், ஆர்.ரங்கநாதன், இரா.இராமமூர்த்தி, இரா. குப்புசாமி, மு.சுரேஷ் குமார், பி.பாரதிபாபு, எம். பி.கதிரவன், எஸ்.வி.மகேந் திரன்,

ஆர்.பன்னீர்செல்வம், வி. செல்வகுமார், எஸ்.பரந்தா மன், கே.கந்தசாமி, ஏ.ரங்க நாதன், எஸ்.ஜானகிராமன், ஆர்.ராஜவேலு, பி. சுரேஷ், ஜி.எஸ்.சுரேஷ்பாபு, இரா. வேலு, கே.மாரிமுத்து, பி.சத்யபாமா, எம்.இ. பன் னீர்செல்வம், இ.மகா தேவன், டி.கண்ணாயிரம், அ.சு.மோகன்ராஜ், எஸ்.பிர காஷ், கே.ராஜி, என்.முரு கன், சுஜாதா பாரதிபாபு, மோகனாகோபிநாத், சுமதி பரசுராமன், பிரமிளா கரு ணாநிதி, குமாரி நாகராஜ், எஸ்.அரங்கநாதன்,

கோ.பானு, மலர் ஜெய பால், அனிதாபலராமன், செ.பகவான்தாஸ், பரிமளா தங்கராஜ், ஆதிலட்சுமி ஞானவேல், கே.எஸ். ஆர். கார்த்திக், எம்.சுந்தரமூர்த்தி, டி.ஆர்.விஜய், டி.வினோத் குமார் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

டி.இரவி நன்றி கூறுகி றார்.

எனவே இதில் சம்பந்தப் பட்டவர்கள் கலந்து கொள்ள வேண்டுமாய் ஒன் றியச் செயலாளர் கே.எஸ். இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருப்பத்தூர் மாவட்டக் கழக அவசரச் செயற்குழுக் கூட்டம்!

## திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் க.தேவராஜி எம்.எல்.ஏ. அறிக்கை!

திருப்பத்தூர், அக். 8 -

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலாளர் க.தேவ ராஜி எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயற்குழுக் கூட் டம் இன்று (8.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) காலை 9.30 மணியளவில் ஜோலார் பேட்டை ஸ்ரீராஜ ராஜேஸ் வரி மஹாலில் பொதுப் பணிதுறை, நெடுஞ்சாலைத் துறை மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆலோசனை படி, மாவட்டக் கழக



அவைத் தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன் தலைமையில் நடைபெற உள்ளது.

அதுசமயம் நாடாளு மன்ற, சட்டமன்ற உறுப் பினர்கள், சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வை யாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், நகர, ஒன்றிய,

பேரூர்க் கழகச் செயலா ளர்கள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு

உறுப்பினர்கள், மாநில, மாவட்டச் சார்பு அணிக ளின் அமைப்பாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட் டுக் கொள்கிறேன்.

பொருள் : 1. டிசம்பர் 17 சேலத்தில் நடைபெறும் இளைஞரணி மாநாடு குறித்து,

2. அக்டோபர் 14 சென்னையில் நடைபெறும் மகளிர் உரிமை மாநாடு குறித்து,

3. BLA 2 மற்றும் BLC (பாக முகவர்கள், வாக்குச் சாவடி முகவர்கள்) பணி கள்,

4.வாக்காளர்கள் பட்டிய லில் பெயர் சேர்த்தல், நீக் கல், திருத்தம் பணிகள்,

5.கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினர்கள் சேர்த்தல் குறித்து,

6. கழக ஆக்கப்பணிகள்

இவ்வாறு திருப்பத்தூர் மாவட்டக் கழகச் செயலா ளரும், ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினரு மான க.தேவராஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

### தொகுதிப் பொறுப்பாளர் சி.தசரதன் பங்கேற்பு!

# திருவொற்றியூர் கிழக்குப் பகுதி வட்டச் செயலாளர்கள் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, அக்.8-

சென்னை வடகிழக்கு மாவட்டம், திருவொற்றி யூர் கிழக்கு பகுதி வட்ட செயலாளர்கள் அவசர ஆலோசனைக் கூட்டம் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாத வரம் எஸ்.சுதர்சனம் எம். எல்.ஏ. ஆலோசனையின் படி நடைபெறுகிறது என திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு :-

காலை 10 மணிக்கு எண் 58 சன்னதி தெருவில் அமைந்துள்ள பகுதி கழக அலுவலகத்தில் திருவொற் றியூர் கிழக்கு பகுதி அவைத் தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி தலைமையில் இன்று (8.10.2023 ஞாயிற்றுக்கி ழமை) வட்ட செயலாளர் கள் அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் சி.தசரதன் கலந்து கொண்டு ஆலோ சனை வழங்குகிறார்.

ஆகையால் இதில் மாநில நிர்வாகிகள் , மாவட்ட நிர் வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள் , செயற்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செய லாளர்கள், மாமன்ற உறுப் பினர்கள் , மாவட்ட பிரதி நிதிகள், மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகி கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டு கொள்கிறேன்.

பொருள் : சேலம் இளை ஞர் அணி மாநாட்டில் கலந்து கொள்வது, BLA 2 பணிகள், வாக்காளர் சிறப்பு முகாம் பணிகள்.

இவ்வாறு திருவொற்றி யூர் கிழக்கு பகுதிச் செயலா ளர் தி.மு.தனியரசு கேட் டுக்கொண்டுள்ளார்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் வாலாஜாபாத் வடக்கு ஒன்றியம் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மற்றும் பாக முகவர்கள் ஆலோசனை கூட்டம் ஒன்றிய அவை தலைவர் பி.பழனி தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்பி.எழிலரசன், ஒன்றிய செயலாளர் பி.எம்.பாபு, ஒன்றிய குழு பெருந் தலைவர் ஆர்.கே.தேவேந்திரன், திருமதி ராஜலட்சுமி, குஜராஜ், எஸ்.பி.பூபாலன், ஒன்றிய கழக நிர்வாகிகள் வ.வெங்கட்ராமன், திருமதி கவிதா, டெல்லி பாபு, எம்.சங்கர், கே.ஆறுமுகம், கே.பார்த்திபன், திருஞானசம்பந்தன், எம்.அருள் முருகன், ஆனந்தன் உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.